21.12.2022
O.S.No. 190/2018

பி.வா.சா.1 சேகர் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி, பிரதிவாதிகள் எல்லாருமே பெருமாள் நாயுடு, பார்வதியின் மக்கள் ஆவார்கள். நான் மற்ற பிரதிவாதிகள் எல்லாரும் திண்டுக்கல்லில் வசிக்கிறோம். வாதி , என் தகப்பனார், என் தாயார் எனது மனைவி, எனது மக்கள் எல்லாருமே தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறோம். நானும் மற்ற பிரதிவாதிகள் எல்லாரும் தனித்தனியாக தொழில் செய்து வருகிறோம். தாவா சொத்து பார்வதி அம்மாளின் பிணைய சொத்து என்றால் சரி. பார்வதி அம்மாளின் தனித்த சொத்து என்பதால் அவர் யாருக்கு வேண்டுமானாலும் கிரையம், ஈடு ஒத்தி, உயில் பண்ணிக் கொள்ளலாம் என்றால் சரி. எனது தாயார் இறப்பதற்கு முன்பாகவே எனது தகப்பனார் இறந்து விட்டார். எனது தகப்பனார் இறந்தது தாவா சொத்தில் உள்ள வீடு என்றால் சரி. எனது தாயார் இறந்ததும் தாவா சொத்தில் உள்ள வீடு என்றால் சரி. எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு, 2ம் பிரதிவாதிக்கு மோகன் ஸ்டோரை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ஆர்த்தி பேன்ஸி ஸ்டோர், 7ம் பிரதிவாதி வேணுகோபாலுக்கு கொடுக்கப்பட்டது என்றால் அவரே வாங்கினார். இந்த கடைகள், வீடு எதுவும் வாதிக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் எனது தகப்பனார் பெயரில் நான் நடத்தி வருகிறேன். ஆனால் அவைகள் எனக்கு ஒதுக்கப்படவில்லை. எனது தாயார் உயிருடன் இருக்கும் போது நகைகள் காணாமல் போனதுபற்றிய புகாரை எனது தாயார் வாதி பெயரில் புகார் கொடுத்தார், ஆனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் மேற்படி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது தாயார் காவல் நிலையத்தில் விசாரணைக்கு வரவில்லை என்றும், அவரை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல, காவல் நிலையத்திற்கு அவரே

சென்று புகார் கொடுத்தார். எனது தாயாரும், வாதியும் ஒரே வீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றும், எனது தாயார் அவர் மீது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றும், நான்தான் வாதிமீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது தாயார் எழுதி வைத்த உயிலை நான் பார்க்கவில்லை, அவர் எழுதி கொடுக்கவும் இல்லை. எனது வழக்கறிஞர் மூலமாக உயிலை பார்வையிட மெமோ தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த உயில் பொய்யானது என்று வாதி மீது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் உயில் எழுதினதே கிடையாது, புகார் எதுவும் கொடுக்கவில்லை. உயிலில் உள்ளது எனது தாயாரின் கையெழுத்து அல்ல என்பதற்கு, கையெழுத்து நிபுணருக்கு நடவடிக்கை எடுத்தேன் என்றால் இல்லை. இந்த வழக்கு பொய்யானது என்பதற்கு வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று தனியாக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் உண்டு என்று தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 06.10.2013 ம் தேதி 2,4,7 ம் பிரதிவாதிகள் தரப்பில் உயிலை பார்ப்பதற்கு மெமோ தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும். 5 ஆண்டு காலமாக உயில் பொய்யானது என்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இல்லை. எனது தாயார் வங்கியில் கடன் வாங்கியதாக சொன்னதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அப்பா கடன் வாங்கினார், அதனை எனது தம்பி வேணுகோபால் தான் அடைத்தார். வாதி கடன் எதுவும் அடைக்கவில்லை. எனது தாயார் எந்த கடனும் வாங்கவில்லை, நானும் எந்த கடனும் அடைக்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் தாயாரை நானோ எனது சகோதர சகோதரிகள் யாரும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் வாதியின் சொத்தில் தான் இருந்தார் என்றும், வாதிதான் தாயாரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டில் வைத்து தாயாரை பராமரிக்கவில்லை என்றும், அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல, நான்

அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளேன். வழக்கிற்காக தாய் தந்தையரை பராமரித்து வருகிறேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கு சொத்து எனது தாயார் இறந்தபிறகுதான் தெரியும், எனது தாயார் பெயரில் தான் வீட்டுவரி, குடிநீர் கட்டணம், மின்சார கட்டணம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் வாங்கிய கிரைய பத்திரம் என்னிடம் உள்ளது, எனது தம்பி கடனை அடைத்தபிறகு அதை என்னிடம் கொடுத்தார். உயில் அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனால் அசல் கிரைய ஆவணம் அவருக்கே உரியது என்றால் சரியல்ல. எனது தந்தையும் தாயாரையும் வாதி பராமரித்து வந்ததால், வாதிக்கு எனது தாயார் தாவா சொத்தை பொறுத்து உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. வாதி எனது தாயாரை கொடுமைப்படுத்தியுள்ள விபரத்திற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரே அவரது கொடுமை பற்றி என்னிடம் சொல்வார். எனது தாயாருக்கு உடல்நலம் மற்றும் கை கால் விளங்காமல் இருப்பதற்கு ஏதாவது ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, ஆனால் 40 வருடமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எனது தாயாருக்கு கைகால் விளங்காமல் முடியாமல் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணம் அனைத்தும் வழக்கிற்கு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. அதனால் உயில் செல்லத்தக்கது என்றும், வாதி சார்பாக பிராது தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

S SIVAKADATCHAM
Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2022.12.21 18:54:28 +0530

Principal District Judge,
Dindigul